**ஊடக அறிவித்தல் இல: PRE/2024/33** **2024.08.15**

## சனாதிபதித் தேர்தல் - 2024 செப்டம்பர் 21
## பெயர் குறித்த நியமனங்கள் சம்பந்தமான முடிவுகளை அறிவிக்கும் அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பு, பதவியிலுள்ள சனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னர் மாதத்துக்குக் குறையாததும் இரண்டு மாதங்களுக்கு மேற்படாததுமான ஒரு காலப்பகுதியினுள் நடைபெறுதல் வேண்டுமென அரசியலமைப்பின் 31 ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளதாதலாலும்,

அரசியலமைப்பின் 104 ஆ உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, 2394/51 ஆம் இலக்கம் கொண்ட, 2024 யூலை மாதம் 26 ஆம் நாளாகிய வெள்ளிக்கிழமை பிரசித்தப்படுத்தப்பட்ட அரசாங்க அதிவிசேட வர்த்தமானி மூலம் 2024 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி சனாதிபதியைத் தெரிந்தனுப்புவதற்காக வேட்பாளர்களை பெயர் குறித்து நியமிக்கும் நாளாக பிரகடனம் செய்யப்பட்டது.

2024 ஆகஸ்ட் மாதம் 14 ஆம் திகதிய மதியம் 12.00 மணி வரை வைப்புப்பணம் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், அக்காலப்பகுதியினுள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினால் முன்மொழியப்பட்ட 22 வேட்பாளர்களும், வேறு அரசியல் கட்சிகள் சார்பாக முன்மொழியப்படும் 01 வேட்பாளரும், தேருநர்களினால் முன்மொழியப்படும் 17 வேட்பாளர்களும் என்ற அடிப்படையில் 40 வேட்பாளர்கள் சார்பாக வைப்புப் பணம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அவ்வாறு வைப்புப் பணம் செலுத்திய வேட்பாளர்களில் 22 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினதும், 01 வேறு அரசியல் கட்சியினதும், தேருநர்களினால் முன்மொழியப்படும் 16 வேட்பாளர்களினதும் 39 பெயர் குறித்த நியமனப்பத்திரங்கள் இன்றைய தினம் மு.ப. 09.00 மணி முதல் மு.ப. 11.00 மணி வரை தேர்தல் ஆணைக்குழுவுக்கு கையளிக்கப்பட்டதுடன், வைப்புப்பணம் செலுத்திய வேட்பாளர்களில் வேட்பாளர் ஒருவர் பெயர் குறித்த நியமனப்பத்திரத்தைக் கையளிக்கவில்லை. அதன்படி, இன்றைய தினம் கையளிக்கப்பட்ட 39 பெயர் குறித்த நியமனப் பத்திரங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி மு.ப. 7.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரையான காலத்துள் சனாதிபதித் தேர்தல் நடைபெறும்.

**ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க**
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு
(தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சார்பாக)